# சைவ உணவுச் சுவையில் சரவணபவன் தரம் அதன் நிரந்தரம்






நிர்வாகி பாண்டியன்





**கா.இளமணி**

ஆரோக்கியமான வாழ்க்கை என்பது உண்ணும் உணவு, அருந்தும் நீரிலிருந்து தொடங்குகிறது என்பது மருத்துவப் பதிலாக இருப்பதை மறந்து விட முடியாது.

இதையே குறிக்கோளாகக் கொண்டு சுகாதார ...றைப்படியும் உணவு தயாரிப்பதோடு மட்டுமின்றி ...ழுக்கு எவ்விதத்திலும் தீங்கிழைக்காத சைவ உணவு வகைகளில் முன்னணி வகிக்கும் உணவகமாக சரவணபவன் உணவகம் பெயர் பெற்று முத்திரை பதித்து வருகிறது.

ஜாலான் மாரோப் ஒரு காலத்தில் ரப்பர் காடுகளாய் இருந்த தோட்டப் பகுதியாகும். இன்று தங்க முக்கோணம் என்று பெயர் பதித்து பெரிய வியாபாரத் தலங்களைக் கொண்ட இடமாக நாட்டின் துரித வளர்ச்சியில் மாறியிருக்கிறது.

மிகுந்த வசதி படைத்தவர்களே இப்பகுதிகளில் வாழ்க்கை நடத்தும் இடமாக இப்பகுதி வளர்ச்சி படைத்திருந்தாலும் சரவணபவன் உணவகம் மிகச் சரியான விலையில் நூறு சதவீதம் சைவ உணவு வழங்கும் உணவகமாக செயல்படுகிறது என்பதுதான் இவ்வுணவகத்தின் சிறப்பு.

கடந்த 2 1/2 ஆண்டுகளாக ஜாலான் மாரோப் சாலையில் வியாபாரத்தைத் துவங்கி சரவணபவன் உணவகம் மற்றுமொரு கிளையை ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவிலும் திறந்து வெற்றிகரமாக நடத்தி வருகிறது என்பதற்கு சரவணபவன் சைவ உணவு வகைகளில் சிறந்து விளங்குகிறது என்பதே காரணமாக இருக்க முடியும் என்பதை சரவணபவன் நிர்வாகி பாண்டியன் கூறினார்.

இதன் வியாபாரம் காலை எட்டு மணிக்குத் தொடங்கிவிடுகிறது. சைவ உணவு வகைகளில் 30க்கும் மேற்பட்டவை. இதுவரை சுவைத்துப் பார்க்காதவைகளாக சரவணபவன் தயாரிப்புகளாகவே இருப்பது இதன் தனிச்சிறப்பு.

இனிப்பு வகைகள் 150 வகைகள் இருப்பதாகக் கூறுகிறார் பாண்டியன். லட்டு, ஜாங்கிரி என்று இனிப்பு வகைகளுக்கும் சரவணபவன் ஓர் உயர்ந்த இடத்தை வகிக்கிறது.

8ம் பக்கம் பார்க்க









சுற்றுலா மன்னன் ஏ.பஹாருதீன், தமிழக சுற்றுலா வாரியத்தலைவர் திரு. வரப்பிரசாத் ராவ்விடமிருந்து விருது பெறுகிறார். அருகில் சுற்றுலா வாரிய இயக்குநர். எப்போதும் இவ்விழாவில் அதிகளவில் தமிழக அமைச்சர்கள் கலந்து கொண்டு சிறப்புச் செய்வார்கள். ஆனால் இம்முறை தமிழகத்தில் தேர்தல் நடைபெறுவதால் தமிழக அமைச்சர்கள் இவ்விழாவில் கலந்துகொள்ளவில்லை.



# சிறந்த சுற்றுலா சேவையாளராக பஹாருடின் விருது பெற்றார்

மலேசிய இந்திய சுற்றுலாத் துறையில் நீண்ட அனுபவமிக்கவர் சுற்றுலா மன்னன் ஏ. பஹாருடின். இவர் அண்மையில் நடைபெற்ற 32 வது இந்திய சுற்றுலா கண்காட்சியில் 7வது முறையாக (27.3.06) சிறப்பு விருதைப் பெற்றார்.

கடந்த 1999ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் இந்தியாவிற்கு அதிக எண்ணிக்கையிலான பயணிகளை நிறைவான சேவையுடன் குறைந்த செலவில் நடத்தியதற்காக சிலருக்கு இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவ்விருது 7வது முறையாக இவருக்கு வழங்கப் பட்டிருப்பது அவரின் சிறந்த சேவைக்குக் கிடைத்த கௌரவிப்பு.

1968 முதல் பள்ளி காலத்திலிருந்தே இவர் இந்தியச் சுற்றுலாவை நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. 2007ஆம் ஆண்டு மலேசியாவிற்கு வருகை தாருங்கள் என்பதையொட்டி சுற்றுலா மன்னன் ஏ.பஹாருடின் குறைந்த விலையில் சிறந்த முறையில் இந்தியாவிலிருந்து மலேசியாவிற்கு சுற்றுலாப் பயணிகளை பெரிய எண்ணிக்கையில் கொண்டு வர இந்தியாவில் அதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்.